## சங்கீதம் 1, 2

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,
கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.
இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.
துன்மார்க்கரோ அப்படியிராமல், காற்றுப் பறக்கடிக்கும் பதரைப்போல் இருக்கிறார்கள்.
ஆகையால் துன்மார்க்கர் நியாயத்தீர்ப்பிலும், பாவிகள் நீதிமான்களின் சபையிலும் நிலைநிற்பதில்லை.
கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்; துன்மார்க்கரின் வழியோ அழியும். (சங்கீதம் 1:1–6)

ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன்?
கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம்பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பிநின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி:
அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்துபோடுவோம் என்கிறார்கள்.
பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்; ஆண்டவர் அவர்களை இகழுவார்.
அப்பொழுது அவர் தமது கோபத்திலே அவர்களோடே பேசி, தமது உக்கிரத்திலே அவர்களைக் கலங்கப்பண்ணுவார்.
நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன்மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம்பண்ணி வைத்தேன் என்றார்.
தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்; கர்த்தர் என்னை நோக்கி: நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்;
என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்;
இருப்புக்கோலால் அவர்களை நொறுக்கி, குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப்போடுவீர் என்று சொன்னார். (சங்கீதம் 2:1–9)

## விளக்கவுரை:

*நீங்களும் கர்த்தருக்குள் இருந்தால், அவர் செய்ததைப் போல நீங்களும் செய்யலாம். ஜாதிகளை உங்களுக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உங்களுக்குச் சொந்தமாகவும் கொடுப்பார். இரும்புக்கோளால் அவர்களை நொறுக்கி, குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப்போடுவீர்கள்.*


Copyright © SArc Ministries All Rights Reserved.

இப்போதும் ராஜாக்களே, உணர்வடையுங்கள், பூமியின் நியாயாதிபதிகளே, எச்சரிக்கையாயிருங்கள்.

பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள்.

குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ்செய்யுங்கள்; கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்; அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள். (சங்கீதம் 2:10–12)

## Psalms 1, 2

Blessed is the man that walketh not in the counsel of the ungodly, nor standeth in the way of sinners, nor sitteth in the seat of the scornful.
But his delight is in the law of the Lord; and in his law doth he meditate day and night.
And he shall be like a tree planted by the rivers of water, that bringeth forth his fruit in his season; his leaf also shall not wither; and whatsoever he doeth shall prosper.
The ungodly are not so: but are like the chaff which the wind driveth away.
Therefore the ungodly shall not stand in the judgment, nor sinners in the congregation of the righteous.
For the Lord knoweth the way of the righteous: but the way of the ungodly shall perish. (Psalms1:1-6)

Why do the heathen rage, and the people imagine a vain thing?
The kings of the earth set themselves, and the rulers take counsel together, against the Lord, and against his anointed, saying,
Let us break their bands asunder, and cast away their cords from us.
He that sitteth in the heavens shall laugh: the Lord shall have them in derision.
Then shall he speak unto them in his wrath, and vex them in his sore displeasure.

Yet have I set my king upon my holy hill of Zion.

I will declare the decree: the Lord hath said unto me, Thou art my Son; this day have I begotten thee.
Ask of me, and I shall give thee the heathen for thine inheritance, and the uttermost parts of the earth for thy possession.



Copyright © SARC Ministries All Rights Reserved.

Thou shalt break them with a rod of iron; thou shalt dash them in pieces like a potter's vessel. (Psalms 2:1-9)

## Commentary:

*If you are in Christ, you can do like him. He will give you the heathen for your inheritance and the uttermost parts of the earth for your possession. You can break them with a rod of iron; you can dash them in pieces like a potter's vessel.*

Be wise now therefore, O ye kings: be instructed, ye judges of the earth.

Serve the Lord with fear, and rejoice with trembling.

Kiss the Son, lest he be angry, and ye perish from the way, when his wrath is kindled but a little. Blessed are all they that put their trust in him. (Psalms 2:10-12)

SARC Ministries



Copyright © SARC Ministries All Rights Reserved.